இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) - **2006/2007**

**ESP 1106 -** கல்வியில் வழிகாட்டலும் ஆலோசனைகூறலும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 25.11.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. கல்வி வழிகாட்டலுக்கும் கல்வி ஆலோசனைகூறலுக்குமிடையிலான இரண்டு வித்தியாசங்களைத் தருக.

02. நடத்தை சீராக்க கோட்பாட்டி(Behavioural Modification Theory) ன் படி நடத்தை எவ்வாறு பகுப்பாய்வு செய்யப்படுகிறது என ஓர் உதாரணம் தந்து விளக்குக.

03. “பார்சோனியன் மாதிரிகை” (Parsonian Model) யை சுருக்கமாக விளக்குக.

04. பொருத்தப்பாடு என்பது சமூகப்பிரச்சினையா அல்லது கல்விப்பிரச்சினையா என்பதை ஆராய்க.

05. பிள்ளைகளில் பொருத்தப்பாடுடைய ஆளுமையை விருத்தி செய்வதற்கு சிரமங்களை ஏற்படுத்தக்கூடிய இரண்டு நிறுவனம் சார் காரணிகளை பரீட்சிக்க.

06. சமூகத்திலிருந்து ஒதுங்கிக்கொள்வதற்கும் (Social withdrawal) சமூகத்திறன்கள் விருத்திக்கும் இடையிலான தொடர்புகளை சுருக்கமாக விளக்குக.

07. ஓர் ஆலோசனைக் கோட்பாட்டின் மூலம் ஆலோசகர் ஏற்றுக்கொள்ளக்கூடிய மூன்று அனுகூலங்களைக் குறிப்பிடுக.

08. உடற் குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு வகுப்பறையில் உதவி வழங்குவதற்கு ஆசிரியர் மேற்கொள்ளக்கூடிய ஐந்து ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i) இலங்கையில் ஆலோசனைகூறல் சேவையின் வரலாற்றை சுருக்கமாக விபரிக்குக.

(08 புள்ளிகள்)

(ii) இலங்கையிலுள்ள இரண்டு அரசநிறுவனங்களைத் தெரிவு செய்து அவற்றின் ஆலோசனைகூறற் பணிகளின் விளைதிறனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

10. (i) பிள்ளைகளில் காணப்படும் ஐந்து நடத்தைப் பிரச்சினைகளை பட்டியல்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ii) இடைநிலை பாடசாலை பிள்ளைகளின் நடத்தைப் பிரச்சினைகளுக்கான காரணங்கள் யாவை?

(05 புள்ளிகள்)

(iii) மேலே நீங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஒன்றைத் தெரிவு செய்து அதனைத் தீர்த்துக்கொள்ள நீங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவலாம் என பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

11. (i) வாழ்க்கைசார் அழுத்தத்தின் (life stress) இயல்புகளை பரீட்சிக்க.

(05 புள்ளிகள்)

(ii) வாழ்க்கைசார் அழுத்தத்துடன் தொடர்புள்ள காரணிகளை பகுப்பாய்வு செய்க.

(05 புள்ளிகள்)

(iii) வாழ்க்கைசார் அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மாணவனுக்கு ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறு உதவி செய்ய முடியும் என விளக்குக.

(10 புள்ளிகள்)

12. "இலங்கையில் தற்போது காணப்படும் சூழ்நிலையின் பின்புலத்தில் ஆலோசனை சேவை என்பது ஆசிரியருக்கும் மாணவருக்கும் முக்கியமானது".

மேற்படி கூற்றினை விமர்சனரீதியாக ஆய்வு செய்க.

(20 புள்ளிகள்)

13. (i) பாடசாலை முறைமையில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகூறல் தொடர்பான வழிவகைகள் யாவை?

(10 புள்ளிகள்)

(ii) ஏதேனும் ஒரு வழிவகையைத் தெரிவு செய்து பாடசாலை முறைமையில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகூறல் சேவையின் வெற்றிக்கு எவ்வாறு அது பங்களிக்க முடியும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

14. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினுக்கு குறிப்பெழுதுக:

(i) கற்றல் சிரமங்கள்.

(ii) கார்ல் றொஜர்ஸ்.

(iii) பாடசாலையில் தொழில் ஆலோசனைகூறல் சேவையின் அவசியம்.

(iv) தோல்வி வட்டம். (The Circle of Failure)

(10 x 2 = 20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)